
www.newwisdomministries.com

# ஞா
# ன
# ஒ
# லி





# இரக்கம் இறைக்குணம்

ஞானம் 07 – ஒலி 14 – 07.04.2024

# ஆசிரியர் பக்கம்



இரக்கமும், கருணையும் இறைவனின் பிள்ளைகளின் பண்புகள் என்று நாம் அறிவோம். அந்தகைய மாபெரும் அருட்குணத்தின்படி வாழும் ஞான ஒலி வாசகப் பெருமக்களே, நம் அருள்நாதர் உயிர்த்த ஆண்டவரின் அற்புத நாமத்தில் உங்களை வாழ்த்துகின்றேன்.

பாஸ்கா இரண்டாம் ஞாயிறை இறை இரக்கத்தின் ஞாயிறாக நாம் கொண்டாடுகின்றோம். வானகத்தந்தை இரக்கமுள்ளவராக இருப்பதுபோல நாமும இரக்கம் உள்ளவர்களாய் இருக்கவேண்டும் (லூக் 6/36) என்ற உண்மையை நமக்கு வலியுறுத்தத் திருஅவை இந்த பாஸ்கா இரண்டாம் ஞாயிறன்று அழைக்கிறது.

இரக்கம், கருணை என்ற இரண்டு சக்கரங்களைக் கொண்டுதான் இந்த உலகம் உருண்டோடிக்கொண்டு இருக்கின்றது. இரக்கமே அன்பின் நரம்பு மண்டலமாக இருக்கின்றது. இதுவே, உறவுகளைப் பற்றிப் பிண்ணிப் பிணைத்திருக்கின்றது. ஒவ்வொரு உயிரும் மற்ற உயிர்களின் இரக்கத்தைக் கொண்டே உயிர் வாழ்கின்றது. தன்மீது இரக்கம் காட்டாத எதையும் அது ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

இரக்கம் இல்லாத மனிதனை அரக்கன் என்றுதான் சொல்வார்கள். அவர்களை மனித குலம் எப்போதும் உதறித்தள்ளியே வந்திருக்கின்றது. இரக்கமில்லாது சக உயிர்களை வதைத்து வாழ்ந்திருந்த எந்த மனிதனும் இறுதியில் புழுத்துப்போய்தான் மரித்திருக்கின்றான். ஏனென்றால் மனிதத்தின் அடையாளமே இரக்க குணம்தான்.

கடவுள் மனிதரையும், அனைத்துப் படைப்புகளையும் படைத்தது, அவர் தன் இரக்கத்தைப் பகிர்ந்தளித்ததால்தான். எல்லாப் படைப்புகளும், கடவுளின் இரக்கத்தின் வடிவங்களே.

ஒருதாய் தன் பிள்ளைகளைப் பெற்றெடுப்பதும் அந்த இரக்கத்தின் சக்தியால்தான். தந்தை தன் குடும்பத்தையும், தன்னைச் சார்ந்திருக்கின்ற அனைவரையும், தாங்கிப் பராமரிப்பதும் அந்த இரக்கத்தினால்தான்.

சிறு தாவரமாகட்டும், புல்லாகட்டும், மரமாகட்டும், ஒரு கல்லாக இருக்கட்டும் அனைத்தும் இருப்பது மற்றவற்றுக்குப் பயனாளியாக இருக்கவேண்டும் என்ற இரக்கத்தினால்தான்.

இப்போது நான் என் கருத்துக்களை தலையங்கமாக உங்களோடு பகிர்ந்து கொள்வதும், இதை நீங்கள் ஆவலோடு படிப்பதும் நான் உங்கள்மீதும், நீங்கள் என் மீதும் கொண்டுள்ள இரக்கத்தினால்தான். பகிர்வும், பங்களிப்பும் இரக்கத்தின் இரு கரங்கள். இந்த இவை இரண்டும் தன்னைச் சுற்றியிருக்கும் அனைத்தின் நலனைப் பார்ப்பதில்தான் மனநிறைவு அடைகின்றது. மற்றவரின் மகிழ்விலேதான் இரக்கம் வாழ்கிறது என்றால் அது மிகையாகாது.

ஆகவேதான் பாஸ்கா இரண்டாம் ஞாயிறை இறைஇரக்க ஞாயிறாக நாம் கொண்டாடுவதன் மூலம், இரக்கத்தை எங்கும் நலம் நிலைக்க, நலம் பெறுக அதற்கான வழிகளை நாம் கற்றுக் கொள்ளவும், அவற்றை வளர்த்தெடுக்கவும் வேண்டிய பயிற்சிகளை நாம் முன்னெடுக்க திருஅவை நம்மை அழைக்கின்றது.

இரக்கம் உள்ள இதயம்தான் நிபந்தனையின்றி அன்பு செய்யும், மன்னிக்கும், பாராமரிக்கும், தியாகம் செய்யும். ஏன், புனித.பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமடலில்

13ம் அதிகாரம் முழுவதும் அன்பையும், இரக்கத்தையும் அதன் பரிமாணங்களைப் பட்டியலிட்டுக் காட்டியிருக்கின்றார். அவற்றைப் படித்தால் மலைப்புதான் ஏற்படுகின்றது.

அன்பு என்பது ஓர் உயிருக்குள் இருக்கும் உயிர்ச் சத்து. இரக்கம் என்பது அது மற்றவருக்காக அன்பு எடுக்கும் புறவடிவம். பிறருக்காக அன்பு இரக்கத்தின் வடிவில்தான் தன்னை வெளிப்படுத்தும்.

தன்னுள் இருக்கும் அன்பு, பிறரை வாழ வைக்க உலகத்தில் இரக்கமாக பிறப்பெடுக்கின்றது.

கடவுளின் அன்பு இயேசுவாக இறைவனின் இரக்கமாக உலகில் பிறந்தது. அந்த கடவுளின் இரக்கத்தைப்போல, நாமும் கடவுளின் இரக்கமுள்ளவராகப் பிறக்க வேண்டும். அதாவது, மறுகிறிஸ்துவாகப் பிறக்கவேண்டும் என்பதுதான் இம்மானுவேல் என்ற வார்த்தை நமக்குக் கற்பிக்கும் பாடமாகும்.

அன்பு உயிர் வடிவம், நிலைவடிவம். ஆனால் இரக்கம் என்பது அன்பின் செயல்வடிவம். சுயநலத்தோடு பிறருக்கு செய்யும் நற்செயல்கள், வேடமிட்ட பொய்யான இரக்கமாகும். எந்தவித எதிர்பார்ப்புமின்றி, தன்னலமின்றி செய்யப்படும் நற்செயல்கள்தான் இரக்கத்தின் உண்மையான வடிவங்கள். ஆனால், அத்தகைய இரக்கம் என்பது சாதாரணமாக செய்துவிட முடியாத ஒன்று. அத்தகைய இரக்கத்தின் வழி, வலி நிறைந்தது. மனிதகுலத்தின் விரோதங்களை, எதிர்ப்புக்களை, அவமானங்களைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும்.

வரலாறு முழுவதும் அதைத்தான் பார்க்கின்றோம். அன்போடும், ஆவலோடும் இறைவன் அனைத்தையும் படைத்தபிறகு, அவர் சந்தித்த வேதனைகளை தொடக்க நூலில் வாசிக்கின்றோம். ஏன் மனிதனைப் படைத்தோமோ? என்று அவர் வருந்தியதை நாம் இதய வலியோடு அதனைப் படிக்கினறோம். கடவுளின் இரக்கமே ஈவிரக்கமின்றி அவமானப்படுத்தப்பட்டது ஒரு விநோத அனுபவம். அதைத்தான் கீழ்வரும் வசனம் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றது.

மண்ணுலகில் மனிதரை
உருவாக்கியதற்காக ஆண்டவர் மனம்
வருந்தினார். அவரது உள்ளம்
துயரமடைந்தது. அப்பொழுது ஆண்டவர்
நான் படைத்த மனிதரை மண்ணிலிருந்து
அழித்தொழிப்பேன். மனிதர் முதல்
கால்நடைகள், ஊர்வன, வானத்துப்
பறவைகள் வரை அனைத்தையும்
அழிப்பேன், ஏனெனில் இவற்றை
உருவாக்கியதற்காக நான் மனம்
வருந்துகின்றேன், என்றார்....ஆனால்
நோவாவுக்கு ஆண்டவரின் அருள்பார்வை
கிடைத்தது...-தொடக்க நூல் 6/6-8

மனித இரக்கத்தின் எல்லை, அதற்கு மதிப்பும், நன்றியுணர்வும் கிடைக்கும்வரைதான். மனிதரின் இரக்கம், மதிக்கப்படாத நேரம் மரித்துப்போகும். ஆனால்....

இறைவனின் இரக்கம் நீடித்திருக்கக் கூடியது. பழைய ஏற்பாட்டில், இதுபோன்று கடவுள் தனது இரக்கத்திற்கு மதிப்பு இல்லாதபோது, கோபப்படுவது..பிறகு அதை மறந்து தன் இரக்க குணத்தை மறுக்காத, மறவாக கடவுளாகவே இன்றும் தொடர்கின்றார். கடவுள் தான் காட்டும் இரக்கத்தைப் பார்த்து, தன்னை ஒரு ஏமாளி என்று மனிதன் நினைத்தாலும், பெற்ற தாய் மறந்தாலும் மனிதனை மறவாது அன்பு செய்யும் இரக்கத்தோடு காப்பாற்றும் செயலில் அவர் என்றுமே சோர்ந்து போவதில்லை. கடவுளின் இரக்கத்திற்கு வெட்கம்,மானம், சூடு, சொரணை எதுவும் இருப்பதில்லை. அதெல்லாம் மனிதனுக்குத்தான். ஆதலால்தான், தன்னை சிலுவையில் கொன்று போட்ட மனித குலத்தை மன்னித்து, தன் உயிர் தியாகத்தால் அதற்கு மீட்பைக் கொடுத்தார் இறைவன்.

ஆகவேதான் கடவுளின் இரக்கம் இணையற்றது. அதைப்போலத்தான் மனிதனும் கடவுளின் இரக்கத்தைக் கற்றுக்கொண்டு வாழ இறைவன் நம்மை அழைக்கின்றார். இரக்கமே இறையுணர்வு.



# விவிலியம் அறிவோம்




## இரகாபுகதை

இஸ்ரயேல் மக்கள் நாற்பது ஆண்டுகள் பாலைவனத்தில் சுற்றித் திரிந்தபின் மோவாபு சமவெளியை அடைகின்றனர். அங்கே பாளையம் இறக்கித் தங்கியிருக்கின்றனர். இனி அவர்கள் யோர்தான் ஆற்றைக் கடந்து வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழையவேண்டும். கானான் நாட்டைக் கைப்பற்றுவதற்குத் தயாரிக்கும் வகையில் இரண்டு ஒற்றர்களை நாட்டை உளவு பார்ப்பதற்காக மோவாபு சமவெளியில் சித்திம் என்ற இடத்திலிருந்து யோசுவா அனுப்புகிறார். ஒற்றர்களின் பெயர்களோ, வேறு எந்தக் குறிப்புகளோ தரப்படவில்லை. போருக்குமுன் அனுப்பப்படும் ஒற்றர்கள் பகைவர்களின் இராணுவவலிமை, அவர்களின் இராணுவத் தயாரிப்புகள், அவர்கள் தங்கியிருக்கும் இடங்கள், உணவு மற்றும் தண்ணீர் வசதிகள், பகைவர்களை முற்றுகையிடுவதற்கான வழிமுறைகள் போன்றவற்றை ஆராய்ந்து அறிவார்கள். குறிப்பாகப் பகைவர்களுக்கு வருகின்ற உணவு மற்றும் தண்ணீர் விநியோகம் பற்றிய செய்திகளை அறிய முயற்சிப்பார்கள். ஏனெனில் உணவையும், தண்ணீரையும் தடுத்துவிட்டால் அவர்களை முற்றுகையிட்டு வெற்றிபெறுவது எளிது. யோசுவாவால் அனுப்பப்பட்ட இரண்டு ஒற்றர்களும் இராகாபு என்ற விலைமாதின் வீட்டிற்கு வந்து அங்கே தங்குகின்றனர்.

ஒற்றர்கள் நாட்டில் ஊடுருவிவிட்டார்கள் என்ற செய்தி எரிகோவின் அரசனுக்குக் கிடைக்கிறது. அவர்கள் இராகாபின் வீட்டில் தங்கியிருப்பதாகவும் செய்திகள் வருகின்றன. அரசன் அவர்களைப் பிடிப்பதற்காக ஆட்களை அனுப்புகிறான். அரசனால் அனுப்பப்பட்டவர்கள் இராகாபின் வீட்டை அடைந்து ஒற்றர்களைப் பற்றி இராகாபிடம் கேட்கின்றனர். இராகாபு அவர்களிடம் சில பொய்களைக் கூறி அவர்களை அனுப்பிவிடுகிறாள். ஒற்றர்களை வீட்டு மாடியில் சணல் தட்டைகளுக்குள் மறைத்துக் காப்பாற்றுகிறார். அரசனால் அனுப்பப்பட்டவர்கள் சென்றபின் ஒற்றர்களை அழைத்து அவர்களோடு ஓர் உடன்படிக்கை செய்துகொள்கிறாள். இந்த உடன்படிக்கைக்கு அடிப்படையாக இஸ்ரயேலின் கடவுள்மீது நம்பிக்கை அறிக்கை செய்கிறாள். ஆண்டவர் இந்த நாட்டை இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுத்துவிட்டார் என்பதைத் தான்

அறிந்திருப்பதாகவும், ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்கு செய்த வல்லசெயல்களைக் கேட்டு மக்கள் கலக்கம் கொண்டிருப்பதாவும், ஆண்டவரே விண்ணுக்கும் மண்ணுக்கும் கடவுள் என்றும் கூறுகிறார். எனவே எரிகோவை அவர்கள் கைப்பற்றும்போது தன்னையும் தன் குடும்பத்தினரையும் பாதுகாக்க வேண்டும் எனவும் கேட்கிறார். ஒற்றர்களும் அதற்கு ஒப்புதல் அளிக்கின்றனர். அங்கிருந்து பாதுகாப்பாக அனுப்பிவைக்கப்பட்டு யோசுவாவிடம் செல்கின்றனர். எரிகோவை யோசுவா கைப்பறறியபோது இராகாபும் அவரது குடும்பத்தினரும் காப்பாற்றப்படுகின்றனர். இஸ்ரயேல் மக்களோடு சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

இராகாபு ஒற்றர்கள் கதையை ஆய்வு செய்யும்போது தொடக்கத்தில் அக்கதை ஒரு காரணக் கதையாக இருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இராகாபு குடும்பம் எவ்வாறு இஸ்ரயேல் மக்களுடன் இணைந்தது; எரிகோவின் மக்கள் அனைவரும் அழிக்கப்பட்ட பின்பும் இராகாபின் குடும்பம் மட்டும் எப்படித் தப்பித்தது என்பதைக் கூறும் வண்ணம் இந்தக் கதை உருவாகியிருக்க வேண்டும். மக்கள் மத்தியில் வாய்மொழியாக கூறப்பட்ட இந்தக் கதையை இணைச்சட்ட ஆசிரியர் பயன்படுத்துகிறார். நாடு கடத்தப்பட்டு பாபிலோனில் அகதிகளாக வாழுகின்ற மக்களுக்கு இதை எழுதுகின்ற ஆசிரியர் இந்தக் கதையின் வழியாக முக்கியமான கருத்தொன்றை கூறவிரும்புகிறார். அக்கருத்து இராகாபுவின் நம்பிக்கை அறிக்கையை மையமாகக் கொண்டது. இராகாபின் நம்பிக்கை அறிக்கை அங்கே நடப்பவை அனைத்திற்கும் ஆண்டவரே காரணம் என்பதை அழுத்தமாகப் பதிவுசெய்கிறது. கடவுள் கானான் நாட்டை இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுத்திருக்கிறார்; அவர்கள் அதைக் கைப்பற்றுவதற்கு அவர்களை வழிநடத்துகிறார். இதன் வழியாக இணைச்சட்ட ஆசிரியர் நாடுகடத்தப்பட்டு அகதிகளாக வாழ்ந்த யூதர்களுக்கு நம்பிக்கையூட்டுகிறார். முந்தைய காலத்தில் ஆற்றலுடன் மக்களுக்காக செயல்பட்ட ஆண்டவர் இப்போதும் அவர்களுக்காகச் செயல்பட முடியும். எனவே ஆண்டவரில் நம்பிக்கைகொண்டு அவருக்கு உண்மையுள்ளவர்களாக வாழ அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறார்.

யோசுவா 2:9-11 இல் வருகின்ற இராகாபின் நம்பிக்கை அறிக்கையின் கட்டமைப்பு ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்று. இதன் கட்டமைப்பு ஒரு மைய வட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டு உள்ளது. அதன் வெளிவட்டத்தில் இராகாபின் இரண்டு கூற்றுகள் வருகின்றன. 2:9அ இல் இந்நாட்டைஆண்டவர் உங்களுக்கு அளிப்பார் என்று நான் அறிவேன் என்கிறார். 2:;11ஆ இல் உங்கள் கடவுளாகிய ஆண்டவர், மேலே விண்ணுலகம் முதல் கீழேமண்ணுலகம் அனைனத்திற்கும் கடவுள் என்கிறார். இடைவட்டத்தில் உலகில் வாழ்வோர் அனைவரும் உங்கள்முன் நடுங்குகின்றனர் (2:9ஆ) என்றும் எங்கள் இதயம்

கலக்கமுற்றது. உங்கள் முன்னிலையில் எங்கள் உள்ளம் தளர்ந்திருக்கிறது (2:11அ) என்றும் குறிப்பிடுகிறார். மையவட்டத்தில் எகிப்திலின்று நீங்கள் வெளியேறும்பொழுது செங்கடலின் நீரை ஆண்டவர் வற்றச்செய்ததுபற்றி அவர்கள் கேள்விப்பட்டுள்ளனர். நீங்கள் கீழை யோர்தானில் இரண்டு எமோரிய அரசர்களான சீகோனுக்கும் ஓகுக்கும் செய்ததையும் அவர்களை அழித்ததையும் அவர்கள் அறிவார்கள் (2:10) என இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிப் பயணிக்கையில் ஆண்டவர் செய்த வல்லசெயல்களைக் குறிப்பிடுகிறார். இவ்வாறு இராகாபின் நம்பிக்கை அறிக்கை விடுதலைப் பயணக் கடவுளோடு கொண்டுள்ள நம்பிக்கையாக வெளிப்படுகிறது. இராகாபு மற்றும் அவருடைய குடும்பத்தினர் மீட்கப்பட்டது புதிய விடுதலைப் பயணமாகச் சித்தரிக்கப்படுகிறது. எரிகோவுக்கு எதிராகச் செய்யப்படும் செயல்கள் எகிப்திலிருந்து இஸ்ரயேல் மக்களை மீட்கும்போது செய்கின்ற செயல்களுக்கு இணையானதாகப் பார்க்கப்படுகின்றன.

இராகாபு கதையில் வருகின்ற பல சிறப்புக் கூறுகள் நமது கவனத்தை ஈர்க்கின்றன. முதலாவதாக, கானான் நாட்டை வெற்றிகொள்வதைப் பதிவு செய்கின்ற யோசுவா நூலின் முதல் பகுதியில் (2-12) ஒரு விலைமாதின் கதையுடன் தொடங்குவது வியப்பாக உள்ளது. இராகாபு ஒரு யூதப் பெண்மணி அல்ல; பிறவினத்தைச் சார்ந்தவர். விலைமாது என்ற முறையில் சமூகத்தில் கீழ்நிலையில் வாழ்பவர். சமூகத்திலும் சட்டங்களிலும் ஒடுக்கப்பட்டு ஓரங்களில் வாழும் மக்களின் பிரதிநிதி. அவர் ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் கூட்டத்தில் ஒருவராக இணைக்கப்படுகின்றார். இராகாபு கதை ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் கூட்டத்தில் பிறஇனத்தவர் உறுப்பினராக இணைவதுபற்றிய கருத்துக்களை மறுவாசிப்பு செய்கிறது. இரண்டாவதாக, இராகாபு கதை யோசுவா நூலின் இறையியலை அறிமுகப்படுத்துகிறது. குறிப்பாக, இணைச்சட்ட வரலாற்றின் இறையியல் அடிப்படைக் கூற்று, பிறவின மக்கள் வாழும் நாட்டைக் கைப்பற்றுவதுபற்றிய விவிலியக் கண்ணோட்டம் மற்றும் பிறநாடுகளை நோக்கிய இஸ்ரயேலின் மறைப்பணி ஆகியவற்றைக் கூறுகிறது. இதை விளக்குவதற்கு ஒரு சில கேள்விகளைக் கேட்பது அவசியமாகிறது. இங்கே பகைவர் எனக் கூறப்படுபவர் யார்? கடவுளின் மக்கள் எனக் கூறப்படுவதற்குத் தகுதியுள்ளவர்கள் யார்? கடவுளின் மறைப்பணியை செய்வதற்கான இடத்தை நிர்ணயிப்பவர்கள் யார்? என்ற கேள்விகள் விடை காணப்படவேண்டும்.

கடவுளின் உண்மையான மக்கள், இனம், குலம், இரத்த உறவு ஆகியவற்றால் தீர்மானிக்கப்படக் கூடாது. அதாவது இஸ்ரயேல் மற்றும் கானான் நாடுகளுக்குள் நடக்கும் போராட்டம் இரண்டு மக்களினங்களுக்கிடையில் நடக்கும் போராட்டம் அல்ல மாறாக எகிப்தின்

அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றுவந்த, பொருளாதாரத்திலும் சமூகத்திலும் கீழ்நிலையில் வாழும் ஒரு மக்கள் கூட்டத்திற்கும் அவர்களுடைய முதலாளிகள் மற்றும் ஆளும்வர்க்கத்தினருக்கும் இடையில் நடக்கும் ஒரு போராட்டம். கானானியர்கள் இஸ்ரயேல் மக்களால் வெறுக்கப்படுகின்ற சில கலாச்சார சமூகப் பழக்க வழக்கங்களைக் கொண்டவர்கள்; பொருளாதாரத்தைத் தங்கள் கட்டுக்குள் வைத்திருக்கும் உயர்குடி மக்கள்; அரசியல் அதிகாரம் கொண்டவர்கள். அவர்கள் உழைக்கும் வர்க்கமான விவசாயிகளுக்கு எதிராகச் செயல்படுகிறார்கள். இஸ்ரயேல் மக்கள் விவசாயிகளின் பிரதிநிதிகளாக வருகிறார்கள். அவர்கள்தான் செல்வந்தர்களும் ஆளும் வர்க்கத்தினரும் உண்பதற்காக உழைப்பவர்கள். விபச்சாரியான இராகாபு ஒதுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதி. விபச்சாரிகள் சமூகத்தில் கீழ்நிலை மக்களாக, ஒடுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டவர்களாக வாழ்ந்தவர்கள். அன்றைய சமூகத்தில் அடிமைகள், சேணக்காரர்கள், கசாப்புக் கடைக்காரர்கள், முடிதிருத்துபவர்கள், மருத்துவச்சிகள், விபச்சாரிகள், நகைச்சுவை நடிகர்கள், தொழுநோயாளிகள் ஆகியோர் சமூகத்தின் ஓரங்களில் வாழ்ந்தவர்கள். இராகாபு தனது குடும்பத்திற்கு உணவும் உறைவிடமும் வழங்குவதற்காக விபச்சாரத் தொழிலில் ஈடுபட்டிருக்கலாம் எனவும் எண்ண முடிகிறது. கீழ்நிலையில் வாழ்ந்த இர்காபு உழைக்கும் வர்க்கமான இஸ்ரயேல் மக்களுடன் தன்னை இணைத்துக்கொள்கிறாள்.

மூன்றாவதாக, இஸ்ரயேலின் மறைப்பணியைப்பற்றிச் சிந்தித்தால் வெளியாட்களைத் தங்களோடு இணைப்பது என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களைப்போல கடவுளுக்குப் பிடித்தமானவர்களைச்சுற்றி அமைந்தது. ஏழைகளும் ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டவர்களும்தான் கடவுளுக்குப் பிடித்தமானவர்கள். இஸ்ரயேலின் முதல் மறைப்பணி அவர்களைப்போல அடிமைத்தன அனுபவம் கொண்டவர்கள், ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்ட மக்கள், ஏழைகள் ஆகியோருடன்தான் அமைந்தது. இராகாபும் அவளது குடும்பமும் இஸ்ரயேல் மக்களுடன் இணைத்துக்கொள்ளப்பட்டதற்கு அவர்களின் கீழ்நிலைதான் காரணம். அவாகளின் சூழ்நிலை இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர்மேல் அவர்களைப் பற்றுகொள்ளவைத்தது. இஸ்ரயேலின் கடவுள் ஏழைகளின் கடவுள்; ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டவர்களின் கடவுள். இராகாபின் செயல்கள் மற்றும் பேச்சுகள் அவர் எரிகோவின் ஆளும் வர்க்கத்திற்கு எதிரான ஒரு குழுவைச் சார்ந்தவர் என்பதைக் காட்டுவதாக உள்ளன. யஸவேகடவுளை அவர் தனது கடவுளாக ஏற்றுக்கொண்டிருக்கிறார் (யோசுவா 2:11-13). இராகாபு ஆண்டவர்மீது கொள்ளும் நம்பிக்கை அவளுடைய கீழ்நிலையிலிருந்து, சாவிலிருந்து அவரையும் அவரது குடும்பத்தினரையும் மீட்கிறது.

பயணம் தொடரும்,
அருட்பணி ஆ. அலெக்ஸ் ஊஆகு




# ஞாயிறு மறையுரை



அருட்பணி.செபாஸ்டின் ராஜ்.
எம்.எஸ்.எஃப்.எஸ்
நலம், தர்மபுரி

## பாஸ்கா 2ம் ஞாயிறு
## இறை இரக்க ஞாயிறு
## 07.04.2024

**திருப்பலி வாசகங்கள்**

திருத்தூதர் பணிகள் 4/32-35
1 யோவான் 5/1-6
யோவான் 20/19-31

இன்றைய மூன்று வாசகங்களும் உயிர்த்த இயேசுவின்மீது நாம் கொள்ள வேண்டிய நம்பிக்கை மற்றும் நல வாழ்விற்கு அவசியமான பகிர்தல் பற்றியும், அதனைச் சுற்றியும் அமைந்துள்ளன.

திருத்தூதர் பணி 4/32-35 ல் இறை நம்பிக்கை இயல்பு வாழ்வில் பகிர்தல் வாழ்வாக மாறி நம்பிக்கையாளர் அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே உயிருமாய், பகிர்ந்து மகிழ்ந்து வாழ்ந்தனர்.

1யோவான் 5/1-6ல் காண்பதுபோல இயேசுதான் மெசியா என்று நம்புவோர், அவரின் கட்டளைகளை கடைப்பிடிப்பர்.அவரன் கட்டளையைத்தான் திருத்தூதர பணியில் தியானித்தோம்.

யோவான் 20/19-31ல் உயிர்த்த இயேசு இருமுறை காட்சி அளித்துள்ளார். யோவான் 16/16ல் கூறுவதுபோல இன்னும் சிறிது காலத்தில நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள். பின்னும் சிறிது காலத்தில் காண்பீர்கள் என்ற இறைவார்த்தைக்கேற்ப இறந்து மூன்று நாட்களுக்குப் பிறகு காட்சி அளித்தார். நன்கு உற்றுக் கவனித்தால்,இன்றைய நற்செய்தியில் உயிர்த்த இயேசுவின் இரக்கம், மன்னிப்பு, மற்றும் புதுவாழ்வு, சீடர்கள்மேல் பொங்கி வழிவதைக் காண்கிறோம். எனவேதான் உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்று மூன்று முறை மனதார வாழ்த்துகின்றார்.

அன்பர்களே, நன்றாக பார்ப்போமானால், இயேசுவோ, நடந்தவற்றை, பாடுகள், இறப்பு இவற்றில் சீடர்கள் தன்னைவிட்டு விலகி ஓடியதை, சுட்டிக் காட்டவில்லை, குத்திக் காட்டவில்லை, காயப்படுத்தவில்லை, அவமானப்படுத்தவில்லை, எதிர்மறை ஆற்றவில்லை, ரணகளப்படுத்தவில்லை. பழிதீர்க்கவில்லை, காரணம் இயேசு உயிர்த்த, இரக்கத்தின் கடவுள்.

உயிர்த்த இயேசு, இறையிரக்கத்தின் பேரூற்று. எனவேதான் உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்றார். தழும்புகள் நிறைந்த கரங்களை விரித்து உங்களை நான் அரவணைத்துக் கொள்கின்றேன், திக்கற்றவர்களாக விடமாட்டேன் என்று உறுதி அளிக்கின்றார்.

பத்து சீடரும் உயிர்த்த இயேசுவைக் கண்டு மெய்மறந்து நின்றார்கள். மகிழ்ந்தார்கள். நம்பிக்கையற்ற தோமாவைப் பார்த்து, என் கையில் உன் விரலை விடு, உன் கையை என் விலாவில் இடு, ஐயம் தவிர்த்து நமபிபை கொள் என்று கூறிய இயேசு உங்களிடமும் உங்களைப் பார்த்து ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள் என்கிறார்.

இயேசுவின் விலாவிலிருந்து பொங்கிவரும் ஊற்றைப் பருகு, அது உன்னை வளப்படத்தும், திடப்படுத்தும், உன் காயங்களை ஆற்றும், ஆம், அது இரக்கத்தின் ஊற்று, உறவின் ஊற்று, மன்னிப்பின் ஊற்று, வாழ்வின் ஊற்று. எனவே வாழ்க்கையில் திகைத்து, தவித்துப் போகாமல், நம்பிக்கை கொள்,

உயிர்த்த இயேசுவை மகதலா மரியா என் ஆண்டவர் என்று உறவோடும், உரிமையயோடும் அழைத்தார். பேதுரு நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள் என்று வியந்து மகிழ்ந்து அழைத்தார்.

ஆகவே, மகதலா மரியாவும், பேதுருவும் உயிர்த்த இயேசுவைத் தம் சொந்தமாக்கினர், உறவாக்கினர், உரிமையாக்கிக் கொண்டனர், உயிராக்கினர்.

நாமும் உயிர்த்த இயேசுவை இரக்கத்தின் ஊற்றை நம்முடைய உறவாக்கி, உரிமையாக்கி மகிழ்வோம். இறைஇரக்கத்தை அனுபவிப்போம். இறை இரக்கத்தன் ஊற்றுக் கண்களாக வாழ்வோம்.

உயிர்த்த இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



# பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு

தி.ப. 4 : 32–35, 1 யோவா. 5 : 1–6, யோவா. 20 : 19–31




பா. சேவியர்
மரியநாதபுரம்,
திண்டுக்கல்


07-04-2024

## திருப்பலி முன்னுரை

நம்பிக்கை, மன்னிப்பு, பகிர்வு இம்மூன்றின் மூலம் இயேசுவின் உண்மைச் சீடர்களாக வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

??.? 2:42–47 1???? . 1:3-9 ???? 20:19–31

ஐயம் நீங்கி நம்பிக்கை கொள். இருப்பதைப் பகிர்ந்து இன்புற்று வாழ். பகிர்வும் அன்பும் நிறைவு பெறும் இடத்தில்தான் நம்பிக்கை உதயமாகிறது என்ற மூன்று முத்தான கருத்துகளை நம் நெஞ்சில் விதைக்கிறது இன்றைய வழிபாடு.

இயேசுவே மெசியா என்பதில் நம்பிக்கை கொண்டு, அந்த நம்பிக்கையின் வெளிப்பாடாக தன்னலம் துறந்து பகிர்ந்து வாழவும், நமது நம்பிக்கை உயிரோட்டமான நம்பிக்கைதானா என்பது குறித்து சிந்திக்கவும் இன்றைய வழிபாடு நம்மை அழைக்கிறது.

முதலில் ஐயப்பட்டு, பிறகு தெளிவடைந்து, உயிர்ப்பின் உண்மையில் உறுதி பெற்ற திருத்தூதர் தோமா ஆண்டவரின் உயிர்ப்புக்கு வலுவான சான்றாகவும், மறை உண்மைகளின் மகுடமான என் ஆண்டவரே! என் தேவனே! என்ற சத்திய வாக்கை இன்றைய நற்செய்தியின் வழியாக நமக்கு வழங்குகிறார்.

கடவுள் நமக்குக் கொடுத்த செல்வம், பொருள், திறமைகள், ஆற்றல்கள், அன்பு என்னும் கொடைகளை பிறருடன் பகிர்ந்து, இறைவனோடு இணைந்து, அவரில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

## முதல் வாசக முன்னுரை

எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் தந்தையாம் கடவுளின் அன்பு மக்கள் என்ற உயர்ந்த எண்ணம் கொண்ட இறைச் சமூகமாக ஆதித் திருச்சபை விளங்கிற்று என்பதை விளக்குகிறது இன்றைய முதல் வாசகம். தொடக்க காலக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இயேசுவின் மேல் அபரிமிதமான அன்பு கொண்ட திருத்தூதர் யோவான் எழுதிய அன்பின் மடல் இன்றை இரண்டாம் வாசகமாக அருளப்பட்டுள்ளது. கடவுள் அன்பாய் இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறார். நம்மோடு அன்பில் இணைந்திருக்கிறார் என்று கடவுளது அன்பின் ஆழத்தை விளக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) பாவத்தின் மீதும், சாவின் மீதும் உம் திருமகன் இயேசுவை வெற்றி கொள்ளச் செய்த தந்தையே இறைவா, என் ஆண்டவரே! என் தேவனே! என்று தம்மையே முழுமையாக அர்ப்பணித்து அருட்பணி ஆற்றி வருகின்ற எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவருக்கும் சிறந்த ஆற்றலையும், நல்ல ஆரோக்கியத்தையும், ஆன்ம பலத்தையும் நிறைவாகத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) நம்பிக்கையைத் தொடங்கி வைப்பவரும், அதை நிறைவு செய்பவருமான இறைவா, புனிதத் தோமாவைப்போல் உயிர்த்த ஆண்டவர் மீது நாங்கள் ஆழமான, உறுதியான நம்பிக்கை கொள்ளவும், அந்த நம்பிக்கையை கேடயமாகக் கொண்டு இவ்வுலகை வெல்லவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) உம் திருமகன் இயேசு வழியாக சமாதானத்தை வழங்கிய அன்பு இறைவா, தொடக்ககால கிறிஸ்தவர்களிடம் காணப்பட்ட விசுவாசத்தை, பிறரன்பை, பகிர்வு மனப்பான்மையை எங்களுக்கும் தந்தருளும். அதன் மூலம் இயேசு தம் சீடருக்கு வழங்கிய அதே சமாதானத்தை நாங்கள் ஒவ்வொருவரும் பெற்று ஒற்றுமையுடன் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) இறந்த உடலுக்கு உயிர் கொடுக்கும் ஆற்றலும், வரண்ட நிலத்தை வளப்படுத்தும் வல்லமையும் கொண்ட இறைவா, காலம் கடந்த பின்பும் குழந்தையின்றித் தவித்த அன்னாள், எலிசபெத் ஆகியோர் மீது மனமிரங்கி அவர்களுக்குத் தாய்மைப் பேறு தந்ததைப் போல், முதிர்ந்த வயதிலும் சாராள் வாழ்வை குழந்தை வரம் தந்து துளிர்க்க வைத்ததைப்போல், குழந்தை பாக்கியமின்றி தவிக்கும் ஒவ்வொரு தம்பதியரும் குழந்தை பாக்கியம் பெற்று மகிழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# ஞான வெளிச்சம் தரும் பொன் மொழிகள்



தன்னை வெல்பவர் ஆயிரம் வீரர்களை வெற்றவர்

ஒருவனைத் தலைக்கணமிக்கவனாக்கும் வெற்றியைவிட
தன்னடக்கத்தைக் கற்றுத் தரும் தோல்வி மேலானது.

கனிதராத காலத்திலும் பறவைகள்
எப்போதும்போல மரங்களுடன் நட்புடன் பழகுகின்றன.

சுகபோக வாழ்வும், துன்பமில்லா சொகுசு வாழ்வும்
மனிதனை அழிக்கும் புதைகுழிக்கான வழிகள்.

மன்னியுங்கள், மன்னித்துக்கொண்டே இருங்கள்.
உண்மையான அமைதியை அனுபவிப்பதற்காக
நிம்மதியோடு மகிழ்வதற்காக.

போராடும் குணமுள்ளவர்க்கு
வெற்றியும் தோல்வியும் விளையாட்டுச் சாமான்கள்

பொறாமைக்காரர்களும், பகைவர்களும்
உங்களின் மேன்மையையும், உயர்வையும்
உங்களுக்கு வெட்டவெளிச்சமாக்கும் அறிகுறிகள்.

ஆங்காரம் தன்னையே ஈவிரக்கமின்றி அழிக்கும் பேராயுதம்.
அதைக் கையிலெடுப்பவர்களையும் காவு வாங்காமல் விடாது.

தகுதியற்றவன் இருக்கும் இடத்திலேயே துள்ளிக் குதித்துக்கொண்டேருப்பான்,
தகுதியுள்ளவன் இலக்கை நோக்கி நகர்ந்துகொண்டே இருப்பான்.
ஒவ்வொரு வினாடியும் அவன் மேலே மேலே உயர்வது தெரியாது.

துன்பங்கள் ஒரு மனிதனின் ஆற்றல்களை
வெளிக்கொணர வரும் அருள்வரங்கள்.

கற்பிப்பதில் சிறப்பானவராய் இருப்பதைவிட
பிறர் கற்றுக்கொள்ளும் வாழ்வின் பாடமாய் இருப்பது மேல்

# தமிழே..அமுதே..எனதுயிரே





## வல்லினம் மிகா இடங்களில் சிலவற்றைக் காண்போம்:

1. எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது.
2. விளித் தொடர்களில் வல்லினம் மிகாது.
3. பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது.
4. வினைத்தொகையில் வல்லினம் மிகாது.
5. அடுக்குத்தொடர்இ இரட்டைக்கிளவி ஆகியவற்றில் வல்லினம் மிகாது.

எழுவாய் தொடர் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம்.
ஒரு ஒரு செயல் நிகழ்வதற்கு காரணமாக இருப்பது எழுவாய்.

பயனிலையில் நின்று யார்? எது? எவை? யாவை? முதலிய வினாக்களை எடுக்கும் போது கிடைக்கும் விடையே வாக்கியத்தின் எழுவாய் ஆகும்.

பயனிலை:
எழுவாயின் செயலைக் காட்டும் சொல் பயனிலை ஆகும். வினைமுற்றுகள், பெயர் சொற்கள்,வினா பெயர் ஆகியவை பயனிலையாக வரும்.
(எடுத்துக்காட்டு)
குமரன் பாடம் படித்தான்.
குமரன் – எழுவாய்
பாடம் – செய்யப்படுபொருள்
படித்தான்– பயனிலை.


அடுத்ததாக பெயரெச்சம்:

பெயர் + எச்சம் = பெயரெச்சம்.
வினைமுடியாமல் எஞ்சி நிற்பது (முடியாமல் இருப்பது) எச்சம் எனப்படும்.
முற்றுப்பெறாத ஒரு வினைச்சொல் ஒரு பெயரைக் கொண்டு முடியுமானால் அது பெயரெச்சம் எனப்படும்.

(எடுத்துக்காட்டு)
படித்த பையன்.
படித்த பையன் என்னும் சொற்றொடரில் படித்த என்னும் சொல் முற்றுப்பெறவில்லை.
பையன் என்ற பெயர் சொல்லைச் சேர்த்தால் படித்த பையன் என்று முற்றுப்பெறுகிறது.
இதுவே பெயரெச்சம்.

பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது.

லீமா விக்டோரியா
தமிழாசிரியை




# விடியல்



## உனக்கு என்னிடம் அன்பு உண்டா?

மூன்றாம் முறையாக இயேசு அவரிடம், யோவானின் மகன் சீமோனே, உனக்கு என்னிடம் அன்பு உண்டா? என்று கேட்டார். உனக்கு என்னிடம் அன்பு உண்டா? என்று இயேசு மூன்றாம் முறை கேட்டதால் பேதுரு துயருற்று, அவரிடம், ஆண்டவரே உமக்கு எல்லாம் தெரியுமே! எனக்கு உன்மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா? என்றார். இயேசு அவரிடம், என் ஆடுகளை பேணி வளர் என்றார். (யோவான் 21:17)

இனியவர்களுக்கு மகிழ்ச்சி கலந்த வணக்கங்கள்..

இறைவனின் அன்பு ஈடு இணை இல்லாதது. வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய கடவுளை நாம் முழு முதல் மனதோடு அன்பு செய்கின்றோமா? உன் தாய் உன்னை மறந்தாலும் நான் உன்னை மறவேன் என்று ஒவ்வொரு நாளும் நம்மை வழி நடத்தி இமைப்பொழுதும் நம்மை விட்டு பிரியாமல் கண்மணியாய் நேசிக்கின்ற இறைவனை நாம் அன்பு செய்கின்றோமா?

சிந்தனை சிறகுகளால் நமக்கு நாம் உண்மையாய் பரிசோதிப்போம்..இன்றும் நம்மிடம் இயேசு கேட்கின்ற கேள்வி ... உனக்கு என்னிடம் அன்பு உண்டா? இறைவனின் அன்பு என்பது நான் கத்தோலிக்க கிறிஸ்தவ(ள்)ன் என்ற அடையாளத்தில் அல்ல.. தந்தையாம் இறைவனை மாட்சிப்படுத்துகின்ற நம் செயல்களில்தான் உள்ளது.

இயேசு அவரிடம், நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர் என்றார். (யோவான் 20:29)

பேறு பெற்றவர்களாய் உயிர்த்த ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின்

மீது நம் நம்பிக்கையை மிகுதியாக்குவோம். உண்மையும் ஒளியும் வடிவமான இறைமைந்தனின் அடிச்சுவடுகளை பின்பற்றுவோம்.



அமெரிக்காவில் ஓர் ஆராய்ச்சி நிறுவனம் ஒவ்வொரு வேலைக்கும் எவ்வளவு மாத சம்பளம் கொடுக்க வேண்டும் என்று ஆய்வு செய்ததாம். ஆய்வு முடிவில் அவர்களது சம்பளப்பட்டியில் வெளியிடப்பட்டதாம். அதில், உயர்ந்த ஊதியம் யாருக்கு வழங்கப்பட்டது? என்று அனைவரும் ஆர்வத்தோடு தேடினார்கள். அந்த சம்பளத்துக்கு உரியவர், ஒவ்வொரு வீட்டையும் அன்போடு கவனித்துக் கொள்ளும் அம்மா மார்களுக்கு தான் தரப்பட்டிருந்தது.

தாய் என்பவள் கனிந்த உள்ளத்தவராய், இறை அன்பில் பிள்ளைகளை வளர்த்து, இக்கட்டான சூழ்நிலைகளில் குடும்பத்தை தாங்கி, அனைவருக்கும் அனைத்துமாகி புன்முறுவலோடு இல்லத்தை அலங்கரிப்பவள். அவள் உண்ணும் இடத்தில் அவள் தம் பிள்ளைகள் ஒலிவ மரக்கன்றுகளை போல் சூழ்ந்து இருப்பார். நல்ல மனையாளை பெற்ற கணவர் நீடூழி வாழ்வர்...ஒரு நல்ல தாயின் அன்புக்கும் உழைப்பிற்கும் ஊதியம் தர முடியாது என்பதுதான் உண்மை. தாயைக் காட்டிலும் தரணியில் வாழும் நாளெல்லாம் தன்னிகரில்லா அன்பு காட்டுபவர் எல்லாம் வல்ல இறைவன் என்பதை நம் மனதில் நிறுத்துவோம்.

கதவுகள் பூட்டப்பட்டிருந்தும் இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று, உங்களுக்கு அமைதி உரித்தாகுக! என்று வாழ்த்தினார். (யோவான் 20:26)

உயிர்த்த ஆண்டவர் வழங்கிய அமைதி நம் உலகத்தையும்இ உள்ளத்தையும் ஆட்சி செய்வதாக. ஆமென்.



# திருக்குறளின் தேனமுதம்



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm

## குறள் 90

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

## குறள் விளக்கம்

அனிச்சப்பூ முகர்ந்தவுடன் வாடிவிடும். அதுபோல் முகம் மலராமல் வேறுபட்டு நோக்கியவுடன் விருந்தினர் வாடிநிற்பர்

## சிந்தனை

சிலநாட்களுக்குமுன் ஒரு கட்டுரையை வாசித்தேன். அந்தக் கட்டுரை ஆசிரியர் தனது வீட்டுத் தோட்டத்தில் இருந்த ஒரு மாதுளை மரத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். அதன் இலைகள் பக்கத்து வீட்டில் உள்ள கிணற்றுக்குள் உதிர்ந்து விழுந்ததினால் பக்கத்து வீட்டுக்காரர் கோபமடைகிறார். உங்களுடைய மாதுளையால் எங்கள் கிணற்றுக்குள் குப்பை சேர்கின்றது. அதை வெட்டிவிடுங்கள் என்றாராம். அதற்கு இவர் முடியாது என்றதால் அன்றிலிருந்து அந்தக் குடும்பமே அவர்களோடு பேசுவதை நிறுத்திவிட்டார்கள். ஒரு நாள் ஏன் பிரச்சனை இந்த மரத்தை வெட்டிவிடுவோம் என முடிவெடுத்து மனைவியிடம், அரிவாளை எடுத்துக் கொண்டுவா இந்த மரத்தை வெட்டவேண்டும் என்றார். அதற்குள் ஒரு தொலைபேசி அழைப்புவர வீட்டிற்குள் சென்றவர் மரத்தை வெட்டுவதை மறந்துவிட்டார். மறுநாள் அவர் அந்த மரத்தைப் பார்த்தபோது அது பட்டுபோயிருந்தது.

மாதுளம் செடி அதாவது ஒரு பெண்ணின் உள்ளத்தைப் போன்று மென்மையானது என்று பொருள் சொல்வார்கள். ஒரு கோபத்தில் அந்தச் செடியை வெட்டவேண்டும் என்று சொன்ன அந்த சொல் கேட்டு செடி தானாக உயிரை விட்டுவிட்டது. இதைத் தான் இக்குறளில் வள்ளுவர் அனிச்சம் பூ முகர்ந்து பார்த்தாலே வாடிவிடும். முகம் திரிந்து சற்று வெறுப்புடன் நாம் விருந்தினரை நோக்கினாலே போதும் அவர்கள் முகம் வாடிவிடுவார்கள் நம் வீட்டிற்கு வரமாட்டார்கள் என்று சொல்கின்றார். எனவேதான் பெரியவர்கள் சொல்வார்கள் ‘அகத்தின் அழகு முகத்தில் தெரியும்’ என்று. எனவே நமது முகத்தில் அகத்தின் மகிழ்ச்சிதான் வெளிப்பட வேண்டுமேதவிர அகத்திலுள்ள அகங்காரம் ஆணவம் அல்ல.

வேதாகமத்தில், அகமகிழ்ச்சியால் முகம் மலரும். மனத்துயரால் உளம் உடையும். நீமொ 15:13 ல் கூறப்பட்டுள்ளது. நம் இல்லம் தேடி வருவோரின் மனம் மகிழும் வண்ணம் முகமலர்ச்சியுடன் நடந்துகொள்வோம். மனத்துயரால் உளம் வாடச் செய்தால் உறவு கெட்டுப்போகும்.